1974 மார்ச் 19]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இருக்கிறது என்றுதான் இப்பொழுது சொன்னேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : மேலூரில் இருக்கக்கூடிய கூட்டுறவு நூற்பு ஆலை மற்ற ஆலைகள் மாதிரி லாபத்தில் ஓடுகிறது. ஒரு காலத்தில் 12,000 ஊசிகளைக் கொண்டிருந்த யூனிட் இப்பொழுது கிட்டத்தட்ட 25,000 ஊசிகளைக் கொண்டிருக்கிறதே ? இங்கே 25,000 ஊசிகளைக் கொண்டு வருவதற்கு எற்கெனவே ஏற்பாடு இருந்தது. இந்த ஆண்டு முடிவிற்குள் அம்மாதிரி செய்வதற்கு அரசாங்கத்திற்கு நோக்கம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கூட்டுறவு ஆலைகள் அனைத்திலும் 25,000 போடவேண்டும் என்ற ஒரு முடிவை அரசு எடுத்திருக்கிறது. நிதி நிலைமைக்கேற்ப படிப்படியாகச் செய்ய வேண்டும். வங்கிகளி லிருந்து பெறுவதற்கு முயற்சி நடைபெற்றுக்கொண்டு வருகிறது.

புதிய சர்க்கரை ஆலைகள்.

*503 வின—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடஆர்க்காடு மாவட்டத்தில் சர்க்கரை ஆலை தொடங்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) குடியாத்தம் வட்டத்தில் அம்முண்டி கிராமத்தில் வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையும், வாணியம்பாடி வட்டத்தில் கேதண்டம்பட்டி கிராமத்தில் திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையும் நிறுவ ஏற்பாடுகள் நடந்து வருகிறது.

திரு. கே. எ. வகாப் : ஏற்படுத்தப்பட்டிருக்கிற ஆலைகள் இன்னும் துவங்கக்கூடிய நிலையில் இல்லை. மேலும் அங்கே வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள வந்தவாசியில்—இப்பொழுது பட்டாளத்திலுள்ள சர்க்கரை ஆலைப் பகுதியில் அதிகமாக கரும்பு உற்பத்தி செய்யப்படுகிறது—திட்டக் காலத்தில் ஏற்பட இருக்கிற சர்க்கரை ஆலை வந்தவாசி செய்யாறு பகுதியில் ஏற்படுவதற்கு அரசு பரிந்துரை செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : புதியதாக 8 கூட்டுறவு ஆலைகள் பற்றி முடிவு எடுக்கும்பொழுது இதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

திரு. சி. வி. எம். அண்ணாமலை : தொடங்கப்பட இருக்கிற கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் ஒன்று திருத்தணி வட்டத்தில் துவங்கப்படுவதற்கு கோரிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. அது ஏற்கப்படுகிறதா இல்லையா என்பதை அரசு அறிவிக்க விழைகின்றேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எல்லாக் கோரிக்கைகளும் பரிசீலிக்கப் படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : துவங்கப்படுகின்ற இந்த சர்க்கரை ஆலைகளில் ஒரு நாளைக்கு எவ்வளவு டன் கரும்பு அரைப்பதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது ? இப்பொழுது இருக்கிற கரும்பு ஆலைகளெல்லாம் குறைந்த திறன் உள்ளதாக இருக்கின்றன. இனிமேல் துவங்கப்பட இருக்கிற ஆலைகள் கூடுதல் திறன் உள்ளதாகச் செய்வதற்கு அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : முதல் கட்டமாக 1,200 டன் என்று தொடங்குகிறோம். படிப்படியாக 4,000 டன் வரை பெரும்பாலும் போக முடியும்.

(முற்பகல் 9–30)

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, புதிதாகத் தொடங்கப்படுகின்ற 8 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை அமைக்கின்றபோது வடாற்காடு மாவட்டத்தில் அமைப்பது பற்றியும் பரிசீலனை செய்யலாம் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். வடாற்காடு மாவட்டத்தில் உற்பத்தியாகின்ற கரும்பின் அளவைப் பார்க்கும்போது, அங்கே இன்னும் 7, 8 சர்க்கரை ஆலைகளைத் தொடங்கலாம். இப்போது நம்முடைய அரசு ஜாயின்ட் செக்டாரில் தொழில்களைத் தொடங்குவதில் நாட்டம் செலுத்தி வருகிறது. ஆகவே வடாற்காடு மாவட்டத்தில் ஜாயின்ட் செக்டாரில் ஒன்று அல்லது இரண்டு சர்க்கரை ஆலைகளைத் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வடாற்காடு மாவட்டத்தில் ஏராளமான கரும்பு உற்பத்தியாவதால்தான் அங்கே பல சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. புதிதாக 8 சர்க்கரை ஆலைகளை அமைக்கும்போது அங்கே அமைப்பது பற்றி பரிசீலனை செய்யப்பட இருக்கிறது. ஜாயின்ட் செக்டாரைப் பொறுத்தவரையில் கூட்டுறவுத் துறையிலே ஷேர் காப்பிட்டல் சேர்ப்பது கஷ்டமாக இருப்பதால் பரிசீலனை செய்ய வேண்டியிருக்கிறது. ஆனால், கரும்பு உற்பத்தியாளர்களை பங்குதாரர்களாகச் சேர்த்து, அரசாங்கமே ஒரு கம்பெனியைத் தொடங்கினால் ஏராளமான பணவசதி உடனடியாக கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதுபற்றிய பரிசீலனை அரசிடம் இருக்கிறது. அதற்கு ஷுகர் கார்ப்பரேஷன் நிறுவப்பட இருக்கிறது.

Mulberry plantations

* 504 *Q*.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state —

(*a*) whether the Government have taken any steps to raise large number of mulberry plantations ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) விவர அறிக்கை @ ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

@ 651–652-ம் பக்கங்களில் இணைப்பு I-ஆக அச்சிடப்பட்டுள்ளது.